பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 09 வியாழக்கிழமை 26.10.2023 கதிர் 349

# சீன ஆய்வுக் கப்பலான ஷி யான் - 6 நேற்று கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைந்தது



(ந.லோகதயாளன்)

ஷியான்--6என்ற சீனாவின் ஆய்வுக் கப்பலானது ஒரு மாத காலத்திற்கும்அதிகமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தங்கிருந்த நிலையில் நேற்று கொழும்பு துறைமுகத்துக்குள் வந்து நங்கூரமிட்டது.

செப்டெம்பர் 11 குவென்ஷோ துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இந்தச் சீன ஆய்வுக் கப்பல், செப்டெம்பர் 19 இந்து சமுத்திரத் திற்குள் நுழைந்தது.

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் இக்கப்பல் பயணங்களைமேற்கொண்டிருந்த நிலையில், ஏற்கனவே திட்டமிட்ட தினமான ஒக்டோபர் 25ஆம் திகதி அக்கப்பல் கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

பொருட்கள் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக சீன கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் ☞2

முன்னர் வந்த செய்தி 11 ம் பக்கத்தில்...

# போதை பொருள்களை தடுக்க புதிய படைப் பிரிவு வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்க புதிய படைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

'பிரபஞ்சம்' வேலைத் திட்டத்தின் 38ஆவது கட்டமாக கம்பஹா மீரிகம கந்தங்கமுவ மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டில் போதைப்பொருள் கடத்தல்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. போதைப்பொருள் கடத்தலில் முக்கிய புள்ளிகளாக செயற்படுபவர்கள் தற்போது சிறையில் மக்களின் வரிப்பணத்தில் சொகுசாக பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களை காப்பாற்றுவதற்கான முயற்சிகள் சிறைக்கு வெளியில் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இதனை எவ்வாறு தடுப்பது? நாட்டிற்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருட்களைகட்டுப்படுத்தவும் அல்லது முற்றாக தடுக்க விசேட ☞2

# இது ரகசியம் அல்ல!

வரும் ஆனா வராது என்று இழுத்தடித்துக்கொண்டிருந்த சீனாவின் ஷி யான் கப்பல் நேற்று மாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தததது.

சீனாவின்இந்தக் கப்பல் இலங்கைக்கு வருமா வராதா என்றால் வந்தேவிட்டது என்றுபதில் கிடைத்திருக்கிறது. இந்தக் கப்பல் நவம்பர் மாதம்தான்இலங்கைக்குவரும்என்று அயலுறவுத்துறைஅமைச்சர்அலிசப்ரி தெரிவித்திருந்தார். அந்தக் கப்பலுக்கு அனுமதிவழங்கப்படவில்லைஎன்று இந்திய ஊடகம் ஒன்றுக்கும் அவர் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்தபோது ஊடகம் ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமெரிக்கா, இந்தியா, சீனா நாடுகளின் அழுத்தங்களையெல்லாம்பார்த்துப்பார்த்து எமக்குப் பழகிப் போய்விட்டது, இனி இதை வைத்துப் பூச்சாண்டி காட்டிக்கொண்டிருக்காதீர்கள் என்கிற வகையில் கருத்துத் தெரிவித்தார். ஆனால், அதே காலப் பகுதியில் இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி அந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றார்.

இந்த நிலையில் அந்தக் கப்பலுடன் கூடி ஆய்வுகளை மேற்கொள்ளவிருந்த பேராதனைப் ☞2

# தனிநபர் கடன் தருநர்களால் அரசுக்குப் பெரும் நெருக்கடி

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. தெரிவிப்பு

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் தனிநபர் கடன் வழங்குநர்கள் ஆளும் தரப்பைநெருக்கடிக்குள்ளாக்குகின்றனர். சர்வதேசநாணயநிதியம்மதிப்பிட்டுள்ள பொருளாதாரவளர்ச்சிக்கு மேலதிகமான வளர்ச்சிஏற்பட்டால்அதன்பயன்களைத் தமக்குத் தரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றனர்.

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனிநபர் கடன்வழங்குநர்கள் கடன்மறுசீரமைப்பைச் சமர்ப்பித்துள்ளனர். அவர்கள் 20 சதவீதமான ஹெயார் கட்டையே எதிர்பார்ப்பதாக கூறுகின்றார்கள். அவர்கள் ஐம்பது வீதமான கதைகளுக்கு தயாரில்லை. வெறும்20சதவீதம்மட்டுமேஅவர்களின் நிலைப்பாடாக உள்ளது.

அவர்கள் மேற்படி ☞2

# ஆய்வு உடன்படிக்கைப்படியே சீனக் கப்பல் கொழும்பு வருகை

## நியாயப்படுத்துகிறார் விமல் வீரவன்ஸ

நாரா நிறுவனத்துக்கும், சீனவுக்கும் இடையிலான ஆய்வு ரீதியானஉடன்பாட்டுக்கு அமைவாகவே சீனக் கப்பல் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஒரே மண்டலம் ஒரேபாதை முன்முயற்சி மாநாட்டில் பங்கேற்றதன் பின்னர் நேற்றையதினம் நாடு திரும்பியபோது கட்டுநாயக்கவில்வைத்து செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் சீனாவுக்கும், எமது நாட்டின் நாரா நிறுவனத்துக்கும் இடையில் காணப்படுகின்ற உடன்பாடுகளுக்கு அமைவாகவே சீனக் கப்பல் வருகை தந்துள்ளது. இருதரப்பினரிடையேயும் ஆழ்கடலைக் கண்காணிப்பதற்கும், ஆராய்வதற்குமான உடன்பாடுகள்உள்ளன.

அந்தஉடன்பாட்டுக்கு அமைவாகவேசீனாவின் ஆய்வுக்கப்பல்ஒக்டோபர் மாதத் தொடக்கத்தில் இலங்கைக்கு வருகை தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால்ஏதேவொரு நாட்டின் உந்துதலின் காரணமாக இந்த சீனக்கப்பலின் பயணத்தினை ☞2

# முடியவில்லை என்றால் சென்றுவிடுங்கள் ஜனாதிபதிக்கு பெரமுன எம்.பி. அறிவுரை

ஜனாதிபதியாலும் மற்றைய ஆட்சியாளர்களாலும் முறையாக விடயங்களை கையாள முடியவில்லை என்றால் மக்கள் முன்னிலையில் சென்றுவிடுங்கள் என்று பொதுஜனபெரமுனவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஆட்சிஎன்பதுஒன்று, ஆளும் கட்சி என்பது வேறொன்று. இந்த இரண்டையும்ஒன்றாகக் கருதுவது சரியான விடயமல்ல. சிறிலங்கா பொது ஜன பெரமுன ஆட்சியை நிறுவியுள்ள கட்சியாகும். ஆனால் அது ஆளும் கட்சியல்ல. இதற்கிடையில் பிளவுகளை மேற்கொள்வதற்கு நாம் முயற்சிக்கவில்லை.

ஆனால், முறையாக விடயங்களை கையாள முடியவில்லை என்றால் மக்கள் முன்னிலையில் செல்வதே பொருத்தமானதாகும். ஜனதிபதியால் முடிய ☞2

# இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனையை சீனாவும்கூட ஏற்றுத்தானாக வேண்டும்

## கிளிநொச்சியில் சுமந்திரன் வலியுறுத்து

இந்தியாவிற்கு மிக நெருக்கமாக இலங்கை இருப்பதால் அதன் பாதுகாப்புக்கரிசனைகளை சீனாவும்கூ-ட ஏற்றுத் தானாக வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வைத்துநேற்றையதினம் செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையானது, இந்து மா சமுத்திரத்தில் அமைந்துள்ளதோடு இந்தியாவிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் ☞2

# பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் கைப்பிள்ளைகளை நிறுத்த முயற்சி

## அதுவே இழுபறிக்கு காரணம் என்கிறார் புபுது

ஜனாதிபதியும்பொது ஜன பெரமுனவினரும் தமதுகைப்பிள்ளைகளை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு முயற்சிப்பதாலேயே அந்த விடயத்தில் இழுபறி ஏற்பட்டுள்ளது என்று முன்னிலை சோஷலிசக் கட்சியின் கல்வி பிரசார செயலாளர்புபுதுஜயகொட தெரிவித்தார்.

நுகேகொடவில் நேற்று செய்தியாளர்களுடன்பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பதில் ஆட்சியாளர்கள் இடையில் இரு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பல்கலைக்ககழகம் அந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது. ஆய்வில் ஈடுபடவிருந்த ஒரு பேராசிரியர் நாட்டை விட்டு வெளியேறி விட்டார் என்றும் மற்றொருவர் பதவியிலிருந்து வெளியேறிவிட்டார் என்றும் தெரிவித்த பல்கலைக்கழகம் இதனால் ஆய்வுகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் சீனக் கப்பல் இனி இலங்கைக்கு வராது என்கிற வகையில் செய்திகளும் கதைகளும் உலாவத் தொடங்கின.

ஆனால், அந்தக்கப்பல் திட்டமிட்டபடி இலங்கைக்கு வரும் என்று நான் இந்தப் பத்தியில் ஒக்டோபர் 8ஆம் திகதியே தெரிவித்திருந்தேன்.

அந்தக் கப்பல் இலங்கைக்கு வரும்போது அதனை வரவேற்பதற்கான தொடக்க நிகழ்வுக்கான அழைப்பிதழ்களை சீனத் தூதரகம் வழங்கி வருகின்றது, திட்டமிட்ட திகதியில் கப்பலை கொண்டு வருவதில் சீனா உறுதியாகவே இருந்து வருகின்றது என்பது இந்த அழைப்பிதழ் விநியோகத்தின் மூலம் தெரிகின்றது, சீனாவில் இருந்து கப்பல் புறப்பட்டு இந்தியாவின் கிழக்குதிசையில் கடலில் ஒருமாதம் ஆய்வு செய்து. அதனை நிறைவு செய்துதற்போது உணவு, தண்ணீர் எரிபொருளுக்காக இலங்கை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது என்றும் அன்றே தெரிவித்திருந்தேன்.

கடைசியில் அயலுறவுத்துறை அமைச்சர் சொன்னதல்ல நான் சொன்னதுதான் நடந்திருக்கிறது. சீனத் தூ-தரகம் வழங்கிய அழைப்பிதழில் குறிப்பிட்டபடி அதே திகதியில் கப்பல் கொழும்பை வந்தடைந்திருக்கிறது. இன்று அதன் வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இலங்கையில் நடக்கவுள்ள ஆய்வுகளின் பின் மீண்டும் இந்தியாவின் மத்திய பகுதியிலும் இந்தக் கப்பல் கடலில் ஆய்வில் ஈடுபடவுள்ளது.

இலங்கையின் கடலில் நீர் நிலை ஆய்வு மற்றும்

கடலின் அடியிலான ஆய்வுகளில் இக் கப்பல் ஈடுபடவுள்ளது.

நீர் நிலை ஆய்வு என்பது எங்குமே சமாதானம் கொண்ட ஆய்வாகவே காணப்படும்

அடிப்படுக்கை ஆய்வு என்பதே பெரும் விளைவுகளையும் ஏற்படுத்தும் விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

கப்பலில் இலங்கை ஆய்வாளர்கள் அல்லது விஞ்ஞானிகள் நால்வர் இன்று ஏற்றிக்கொள்ளப்படவுள்ளனர். அடுத்துவரும் நாட்களில் இவர்களும் அந்தக் கப்பலில் இருந்தபடி ஆய்வுகளில் ஈடுபடுவர். 10 நாள் கடல் ஆய்வில் ஈடுபட்ட பின்பு மீண்டும் துறைமுகம் வந்து ஏற்றிய இலங்கையரை இறக்கிய பின்பு கப்பல் இலங்கையில் இருந்து வெளியேறும்.

இலங்கை விஞ்ஞானகளை இறக்கிய பின்பு நாட்டில் இருந்து செல்லும்போதும் கப்பல் ஆய்வில் ஈடுபட்டவாறே செல்லும்.

இவ்வாறு இடம்பெறவுள்ள ஆய்வின் தொடக்க நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு சீனாவின் தென் சீனக் கடல் ஆய்வு நிறுவனம், சீன அறவியல் அக்கடமி கடிதத் தலைப்பில் அதிகாரிகள் விருந்தாளிகளுக்கு அழைப்பிதழ்களை வழங்கி இருந்தது. அதன்படியே நிகழ்வுகள் நடந்தேறுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் இந்தியாவினதோ அமெரிக்காவினதோ கருத்துக்களுக்கு இலங்கை மதிப்புக் கொடுத்ததாகத் தெரியவில்லை என்பதே உண்மை.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைப்பிரிவு ஒன்று அவசியமாகிறது.

வெளிநாடுகளில் உள்ள குண்டர்கள், பணம் பறிக்கும் கும்பலைப் பயன்படுத்தி பணக்காரர்களிடம் கப்பம் கோரும் செயற்பாடுகளும் நடந்தேறி வருகின்றன.

இதற்கான முழு பொறுப்பையும் சட்டக்கட்டமைப்பே ஏற்கவேண்டும். நாட்டின் சட்டக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது. சட்டம் ஒழுங்கை வலுப்படுத்த ஒரு நாடாக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் சிங்கப்பூர் நாட்டில் வழங்கப்படும் தண்டனை முறை இலங்கையிலும் நாட்டின் சட்டம் ஒழுங்கு கேள்விக் குறியாகியுள்ளது - என்றார்.

## தனிநபர் கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தினை விடவும் ஆளும் தரப்பை நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதற்கு முயற்சிக்கின்றார்கள். குறிப்பாக, நாட்டின் வளர்ச்சி வீதமானது, சர்வதேச நாயண நிதியம் எதிர்பார்க்கின்றதனையும் விடவும் அதிகமானதாக காணப்படுமாயின் அதனை கடன்வழங்குநர்களான தமக்கு கிடைக்க வைப்பதனை உறுதி செய்ய வேண்டும் என்று சிக்கல்களை ஏற்படுத்த முனைகின்றனர்.

உண்மையில் இந்தச் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது. அவர்கள் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் மீதே சுமையைப் போடவுள்ளனர். ஆகவே கடன்சுமைகளை சுமப்பவர்களுக்கே அதனுடைய இலாபம் கிடைக்கவேண்டும் அல்லது ஏங்கோ உள்ள கடன் வழங்குநர்களுக்காக அந்த இலாபம் கிடைக்கவேண்டும் என்பதுதான் நியாயமான கேள்வியாக இங்குள்ளது.

எமது மக்கள் உண்ணாது, உறங்காது, கடன்களை மீளச்செலுத்துவதற்காக செயற்படுகின்றபோது, எங்கோவுள்ள சர்வதேசகடன்வழங்குநருக்கு அதன் பயன்கள் எவ்வாறு கிடைக்கலாம்?

இந்த விடயங்களை நாம் சுட்டிக்காட்டியபோதும், அஜித் நிவாட் கப்பால் போன்றவர்கள் இரண்டாம் தர நபர்களுக்கு விற்பனை செய்து மூன்று மாதங்களுக்கான கணக்குகளைகாண்பித்து அவற்றை ஆறு மாதங்களுக்காக பெருக்கிக் காண்பித்து அனைத்தையும் இழக்கச்செய்துள்ளனர் - என்றார்.

## சீன ஆய்வுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அதனடிப்படையில், 28 அறிவியல் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளும் 13 ஆய்வுக் குழுக்களுடன் இந்த கப்பல் 80 நாட்கள் கடலில் பயணிக்கும் என சீனா கூறியுள்ளது. இதன் போது, 12,000 கடல் மைல்களுக்கும் மேற்பட்ட பகுதிகள் ஆய்வுக்குட் படுத்தப்படவுள்ளன

முன்னதாக, ஷி யான் --6 கப்பலானது, ஒக்டோபர் 25 இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும், நாரா நிறுவனத்தின் அனுமதியுடன் ருஹூண பல்கலைக்கழகமும் இந்தக் கப்பலில் கடல் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு கடற்படையின் களஆய்வுகளின் பிரகாரம் குறித்தகப்பலுக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தபோதும், பின்னர் வெளிவிவகார அமைச்சே இறுதியான தீர்மானதை எடுக்கும் என்றும் அறிவித்தது. எனினும், உயர்மட்ட இராஜதந்திரிகளுக்கு இந்தியா வழங்கிய பதில் நடவடிக்கைகளால், சீன ஆராய்ச்சிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வருவது தாமதமாகுமென ஆளும் தரப்பால் அறிவிக்கப்பட்டது. நவம்பர் மாதமே சீனக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

ஆளும் தரப்பு அப்படி அறிவித்திருந்தபோதும் திட்டமிட்டபடி சீனக் கப்பல் நேற்றுக் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டிருந்தது. மாலை 5 மணியளவில் துறைமுகத்திற்குள் நுழைந்த கப்பல் இன்று நடைபெறவுள்ள வரவேற்பு நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய வகையில் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் கடற்பரப்பில் 10 தினங்கள் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கில் சினாவின்

கப்பலின் ஆய்வுப் பணிக்கான தொடக்க நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளது. இதற்கான அழைப்பிதழ்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டு வருகைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

நாளைய நிகழ்வுகளை சீனாவின் தென் சீனக் கடல் ஆய்வு நிறுவனம், சீன அறவியல் அக்கடமி என்பன மேற்கொண்டுள்ளன.

## முடியவில்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்றால், ஆட்சியாளர்களால் முடியவில்லை என்றால் சென்றுவிடுங்கள்.

முதலில் காட்டுச் சட்டங்கள் வரும், பின்னர் காட்டு மிருகங்கள் வரும், காட்டுப் பறவைகளும் வரும். இறுதியால் நாடு மீண்டும் நெருக்கடிகளுக்குச் சென்றுவிடும் ஆகவே முடியவில்லை என்றால் அதனை வெளிப்படையாகக் கூறிவிட்டு வெளியேறிவிடுங்கள் என்று நாம் கூறுகின்றோம்.

எமது கட்சியைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி வேட்பாளர் தயாராகஇருக்கின்றார். என்னுடைய மொழியில் கூறுவதாக இருந்தால் நட்சத்திர நடிகர் தயாராகவுள்ளார். அறிவிப்பு வெளியாகியவுடன் நாம் செயலில் இறங்குவோம் - என்றார்.

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ளது. இதே இலங்கையானது, சீனாவின் தென்சீனக் கடலிலோ அல்லது அருகிலோ இருந்திருந்தால் சீனாவின் பாதுகாப்பு கரிசனைகளை நாம் நியாயமானது என்று ஏற்றுக்கொண்டிருப்போம்.

அவ்வாறான நிலையில் இந்து மா சமுத்திரத்தில் இந்தியாவுக்கு அருகில் உள்ள இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு பாதுகாப்புக் கரிசனைகள் இருக்கின்றன என்பதை எவருமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனை சீனாவும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறான நிலையில், இந்தியாவுக்குள்ள பாதுகாப்பு கரிசனைகள் மற்றும் அவர்களுக்கு காணப்படுகின்ற சந்தேகங்களை நிவர்த்திசெய்யாது, மிகத்தொலைவில் உள்ள நாடு ஆழ்கடல் ஆராய்ச்சி செய்வதென்பது பொருந்தாதவொரு விடயமாகும்.

அந்த விடயமானது இந்தியாவினுடைய எதிர்ப்புக்கு மத்தியில் மேற்கொள்ளப்படக்கூடாது என்பது எமது தெளிவானதொரு நிலைப்பாடாகும் என்றார்.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிளவுகள் காணப்படுகின்றன.

ஆளும் கட்சியும், ரணில் விக்கிரமசிங்கவும் இதனால் பிளவுபட்டுள்ளார்கள்.

மொட்டுக் கட்சியினர் தமது கைப்பிள்ளையொன்றை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு முயற்சிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவும் தனது கைப்பிள்ளையொன்றை அதே பதவியில் அமர்த்துவதற்கு முயற்சிக்கின்றார்.

இந்த நாடகத்தின் மூலம் பொலிஸ் மா அதிபர் எவ்வாற நியமிக்கப்படவுள்ளார் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிந்து கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. இதனால்

## ஆய்வு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதப்படுத்துமாறு இலங்கை ஆட்சியாளர்கள் சீனாவிடம் கோரியிருந்தனர்.

சீனாவுக்கும், நாரா நிறுவனத்திற்கும் இடையில் காணப்படுகின்ற உடன்பாட்டுக்கு அமைவாக ஆராய்ச்சிக் கப்பலொன்று வருகை தருவதை தடுக்கும் வகையில் மூன்றாவது நாடொன்று தலையீடுகளைச்செய்து அந்த வருகை பிற்போடப்படுமாக இருந்தால் அவ்விதமான வெளிநாட்டுக்கொள்கையை பின்பற்றும் ஆட்சிக்குச் சீனா ஒத்துழைப்புக்களை வழங்குமென நான் நினைக்கவில்லை.

எமது அருகில் உள்ள பெரிய அண்ணாவின் கண்கள் பெரிதாகியவுடன் ஆட்சியாளர்களின் கால்கள் நடுங்கத்தொடங்கும். மேற்குலகத்தின் பெரிய அண்ணா ஏதேனும் கூறியவுடனும் ஆட்சியாளர்களின் கால்கள் நடுங்கத்தொடங்கும்.

அவ்விதமான நிலைமைகளால் எமது உண்மையான நண்பர்கள் விலகிச் செல்லும் நிலைமைகளே ஏற்படும். உண்மையானநண்பர்கள் என்று அண்ணாக்கள் கூறினாலும் அவர்கள் எம்மிடத்திலிருந்து பறித்துக்கொண்டு செல்லவே முயற்சிப்பார்கள். அவர்களால் எமக்குளந்தவிதமானநன்மைகளும் இல்லை - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பில் வெளிநாட்டு மோகத்தினால் 100 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் நிர்க்கதி

## சாணக்கியனிடம் அவர்கள் அடைக்கலம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெளிநாடு மோகத்தால் பணத்தை இழந்துள்ளனர் எனக் குறிப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சுமார் 8 கோடி ரூபாவை போலி முகவர்களின் ஆசைகளை நம்பி இழந்துள்ளதாகவும் தற்போது நிர்க்கதிக்குள்ளான எம்மை காப்பாற்றுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினரிடம் தஞ்சம் அடைந்துள்ளனர்.

திங்கட்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு வந்திருந்த குறித்த பணத்தை இழந்தவர்கள், சுமார் பல மணித்தியாலங்கள் நாடாளுமன்ற உறுப்பினரை சந்தித்து தத்தமது பிரச்சினைகளை முன்வைத்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தனது கருத்தில் குறிப்பிட்டவை வருமாறு -

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு என கூறி 185 பேரிடம் 8 கோடி ரூபாவுக்கும் அதிகமாக மோசடி அரச உத்தியோகத்தில் உள்ள சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு உடந்தையாக பாடசாலை மாணவன் ஒருவரும் உள்ளடங்குகிறார் என அறிகின்றேன். தற்போது இவ்விடயம் தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கலந்துரையாடினேன்.

பாதிக்கப்பட்ட மக்கள் என்னை இதற்கான உரிய நீதியைப் பெற்றுத் தரும்படி எனது அலுவலகத்தில் சந்தித்திருந்தார்கள். தற்பொழுது இவ்வாறான மோசடிகள் அதிகளவாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஏமாற்றுக்காரர்களிடம் இருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும் எனத் தெரிவித்தார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் 188 பேரை தேர்ந்தெடுத்திருந்தார்கள். இதில் டுபாய்க்கு 146 பேரும் டென்மார்க்கிற்கு 20 பேரும், தாய்லாந்துக்கு 22 பேரும் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

அத்துடன், டுபாய் நாட்டிற்கு செல்பவர்களிடம் 350,000 ரூபாவும் டென்மார் நாட்டிற்கு செல்பவர்களிடம் 550,000 ரூபாவும் தாய்லாந்து நாட்டிற்கு செல்பவர்களிடம் 4 முதல் 5 லட்சம் வரை பணம் வாங்கியுள்ளனர். மொத்தமாக 188 பேரிடம் அண்ணளவாக 7 அரை கோடி ரூபாவை மோசடி செய்துள்ளனர் என பாதிக்கப்பட்டவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

(05)

# பொலிஸாரால் மர நடுகை வேலைத்திட்டம் ஆரம்பம்







இயற்கையை நேசித்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ ஏற்பாட்டில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத் தலைமையில் பொலிஸாரால் மர நடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பிரிவுப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஐ நசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மர நடுகை ஆரம்ப நிகழ்வு திங்கட்கிழமை நடை பெற்றது.

இதன் போது சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எமு.நௌபீர், சம்மாந்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பெறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஏ.டி.ஆர் விஜயவர்த்தன மற்றும் பொலிஸ் உத்தியோகத்தகர், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளை அழகுபடுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 200 இற்கு மேற்பட்ட மரக்கன்றுகள் பல இடங்களில் நடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மீண்டும் வரிசை யுகம் ஏற்படுமாம்

## எச்சரிக்கிறார் ரங்கே பண்டார



மின்சார கட்டண அதிகரிப்பு மக்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாத சுமை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் குறுகிய காலத்துக்காவது இதனை தாங்கிக்கொள்ளாவிட்டால் மீண்டும் வரிசை நிலைமைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

வங்குரோத்து அடைந்திருக்கும் நாட்டை அதில் இருந்து மீட்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது அரசியல் அனுபவம் மற்றும் சர்வதேச நாடுகளுடன் இருக்கும் தொடர்புகள் மூலம் பொருளாதார நெருக்கடியை போக்கிக்கொள்ள உதவிகளைப் பெற்று வருகிறார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பலரும் பாராட்டியுள்ளனர்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக்கொள்வதற்காக நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் முடிந்தளவு பூரணப்படுத்தி இருக்கிறது.

அதில் இடம்பெற்ற சில குறைபாடுகள் காரணமாக இரண்டாம் கட்ட உதவியை பெற்றுக்கொள்வதற்கு சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

இறுதியாக இடம்பெற்ற பேச்சுகளின் போது அதற்கான இணக்கப்பாடு தற்போது ஏற்பட்டிருக்கிறது. நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவி இலங்கைக்கு வழங்குவதற்கு நாணய நிதியத்தின் செயற்குழு சபை மட்டத்தில் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக நாணய நிதியத்தின் பேச்சாளர் பீடர் புறூக் தெரிவித்திருக்கிறார்.

எனவே இந்த உதவிகள் கிடைக்கப்பெற்று, பொருளாதார நிலைமை படிப்படியாக சரி செய்வதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். நாடு வங்குரோத்து நிலைக்கு செல்ல ஜனாதிபதி காரணமல்லன்.

வங்கு அடைந்திருக்கும் நாட்டைக் கட்டியெழுப்பவே ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். அதனால் மக்கள் பொருளாதார நெருக்கடி நிலையில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மின் கட்டணம் மற்றும் ஏனைய கட்டண அதிகரிப்புகள் தாங்க முடியாத சுமையாகும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இருந்தபோதும் குறுகிய காலத்துக்காவது இதனை பொறுத்துக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் மீண்டும் கடந்த வருடத்தில் இடம்பெற்றதைப்போல் எரிபொருள், எரிவாயு பெறுக்கொள்ள வரிசையில் இருக்கவேண்டிய நிலை ஏற்படும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏற்கவே முடியாத நெருக்கடி

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும்பொருளாதாரநிபுணருமானகலாநிதி ஹர்ஷடிசில்வாதெரிவித்திருக்கும்கருத்துபெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. பொருளாதார நெருக்கடியின்சுமையைமுழுமையாகச்சுமக்கும் மக்கள், அந்த நெருக்கடியிலிருந்து நாடு விடுபடும்போது அதன் பயன்களை அனுபவிக்க முடியாத நிலையை நோக்கித் தள்ளப்படுகிறார்கள் என்பதை அவர் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

''தனிநபர் கடன்வழங்குநர்கள் கடன்மறுசீரமைப்பைச் சமர்ப்பித்துள்ளனர். அவர்கள் 20 சதவீதமான ஹெயார் கட்டையே எதிர்பார்ப்பதாக கூறுகின்றார்கள். அவர்கள் ஐம்பது வீதமான கதைகளுக்கு தயாரில்லை. வெறும் 20 சதவீதம் மட்டுமே அவர்களின் நிலைப்பாடாக உள்ளது.

அவர்கள்மேற்படிவிடயத்தினைவிடவும்ஆளும் தரப்பை நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதற்கு முயற்சிக்கின்றார்கள். குறிப்பாக, நாட்டின் வளர்ச்சி வீதமானது, சர்வதேச நாயண நிதியம் எதிர்பார்க்கின்றதனையும் விடவும் அதிகமானதாக காணப்படுமாயின் அதனை கடன்வழங்குநர்களான தமக்கு கிடைக்க வைப்பதனை உறுதி செய்ய வேண்டும் என்று சிக்கல்களை ஏற்படுத்த முனைகின்றனர்" என்று ஹர்ஷா தெரிவித்துள்ளார்.

இது மிக மோசமான ஒரு நிலை. ஆனால் ஆளும் தரப்பு இது தொடர்பில் வெளியே மூச்சும் விடவில்லை. வைகாசி மாதத்திற்குள் கடன் மறுசீரமைப்பை முழுமைப்படுத்துவோம் என்று ஆளும் தரப்பினர் தெரிவித்து வந்தனர். ஆனால், இந்த மாதம் முடிவதற்கு இன்னும் 4 நாட்கள் மட்டுமே எஞ்சியிருக்கும் நிலையில், கடன்மறுசீரமைப்பின்வெற்றிகரமானதிட்டம்ஒன்று இன்னும் அறிவிக்கப்படவில்லை. அடுத்துவரும் நாட்களில்அதற்கானவாய்ப்புக்கள்இருப்பதாகவும் தெரியவில்லை. அப்படியிருக்கும்போது நாடு மீட்சியை நோக்கி சிறிது முன்னேறினாலும் அதன் பயனையும் கடன் வழங்குநர்களே அனுபவிக்கவேண்டும் என்பது எந்த வகையிலும் நியாயம் அல்ல.

ஏனெனில் உள்ளூர் கடன் மறுசீரமைப்பின் மொத்தச் சுமையும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும்ஊழியர்நம்பிக்கைநிதியம்ஆகியவற்றுக்குப் பணம்செலுத்தும்தனியார்துறைஉழைப்பாளிகள் மீதே சுமத்தப்பட்டுள்ளது. அப்பாவிகளான, ஏழைகளானஇந்தஉழைப்பாளிகளின்ஒட்டுமொத்த உழைப்பையும் சுரண்டும் ஆளும் தரப்பினர் ஒரு சிறு முன்னேற்றம் ஏற்பட்டாலும் அதனை கடன் வழங்குநர்களுக்கு வழங்குவார்களானால் அதுபோன்ற கொடுமை வேறு இருக்க முடியாது.

"இந்தச் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது. அவர்கள் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் மீதே சுமையைப் போடவுள்ளனர். ஆகவே கடன்சுமைகளை சுமப்பவர்களுக்கே அதனுடைய இலாபம் கிடைக்கவேண்டும் அல்லது எங்கோ உள்ள கடன் வழங்குநர்களுக்காக அந்த இலாபம் கிடைக்கவேண்டும் என்பதுதான் நியாயமான கேள்வியாக இங்குள்ளது.


எமதுமக்கள்உண்ணாது,உறங்காது,கடன்களை மீளச் செலுத்துவதற்காக செயற்படுகின்றபோது, எங்கோவுள்ள சர்வதேச கடன்வழங்குநருக்கு அதன் பயன்கள் எவ்வாறு கிடைக்கலாம்?'' என்றும் ஹர்ஷா கேள்வி எழுப்பியுள்ளார்.

அது நியாயமான கேள்விதானே!

# மூடப்பட்ட சலூன் கடை

**உப்புல் யோசப் பெர்னான்டோ**

ஜூலை 15, 1993 இல், சிறீ லங்கா தேசியக் கட்சியின் (சிறிலங்கா நனல் பார்ட்டி) தலைவரான சிறிமாவோ பண்டாரநாயக்க, தனது மகனும் கட்சியின் உறுப்பினருமான அனுர பண்டாரநாயக்கவுக்கு கட்சியில் தடை விதித்தார். அதனால் அனுர அரசியல் குழப்பத்தில் இருந்தார். இருப்பினும் அவருக்கு மகிந்த ராஜபக்ச மற்றும் 'அனுரலோயல்' எம்.பி.க்களின் ஆதரவு இருந்தது. இருந்தாலும் அரசியலில் இனித் தான் எடுக்க வேண்டிய முடிவு குறித்து அவருக்குள் பல கேள்விகள் இருந்தன.



இந்த நேரத்தில்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன குரே அனுரவுக்கு செய்திகளை அனுப்பத் தொடங்கினார். அப்போது ஜனாதிபதி பதவியில் இருந்த விஜேதுங்கவும் அனுரவை ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொண்டதைப் பெரும் வெற்றியாகக் கருதினார். அனுரவின் பரம அரசியல் எதிரியான பிரேமதாசவும்கூட படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் அனுரவை ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ப்பதற்கு முயன்றிருந்தார். அதேநேரம், லலித் மற்றும் காமினி பிரேமதாசவிடம் இருந்து பிரிந்து திருமதி பண்டாரநாயக்கவுடன் இணைந்து செயற்படத் தொடங்கியிருந்தனர். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைந்த சந்திரிகாவும் அவர்களுடன் கூட்டுச் சேரத் தயாராக இருந்தார். மாத்தேனி, லலித், காமினி, சந்திரிகா ஆகியோரின் கூட்டணியை அனுரவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அந்தக் கூட்டணியின் காரணமாக அனுர கட்சியில் இருந்து ஒதுக்கப்பட்டார். பிரேமதாச, அனுரவை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இணைத்துக்கொள்ளுமாறும், அவர் இணைந்தால் அவருக்குப் பிரதமர் பதவியை வழங்கலாம் என்றும் சிறிசேன குரே ஊடாக அனுரவுக்கு செய்திகளை அனுப்பினார்.



பிரேமதாசவின் ஆட்சியில் அனுர இணைந்து பிரதமர் பதவியை ஏற்றிருந்தால் பிரேமதாச கொல்லப்பட்டபோது ஜனாதிபதியாகியிருப்பார். அனுராவுக்கு அவ்வளவு அதிர்ஷ்டம் இருக்கவில்லை. அவருக்குப் பிரதமர் பதவியைவிட சிறீலங்கா சுதந்திரக் கட்சியே பெரிதாக இருந்தது. பிரேமதாசவுடன் இணைவதை அரசியல் தற்கொலை என்று அவர் நினைத்தார். பிரேமதாச கொல்லப்பட்டு விஜேதுங்க ஜனாதிபதியாகிய பின்னர் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் சந்திரிக்கா முதலமைச்சரானார், அனுர சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் மேலும் அநாதரவான நிலைக்குத்தள்ளப்பட்டார். பின்னர் அவரது கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டபோது, சிறிசேன குரே மூலம் ஜனாதிபதி விஜேதுங்கவின் அழைப்பை ஏற்க அவர் முடிவு செய்தார்.



அனுரவின் கட்சி உறுப்புரிமை தடைசெய்யப்பட்டு 89 நாட்கள் கடந்த நிலையிலும், அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை முன்வைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அஞ்சியது. அனுர விரும்பினால், அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும்போதே விஜேதுங்கவின் ஆட்சியில் இணையும் திறன் அவருக்கு இருந்தது. இருப்பினும் அவர் அப்படி நடந்துகொள்ளவில்லை. அதுமட்டுமல்ல ஏற்கனவே பிரேமதாசவை விட்டு விலகிய லலித், காமினி, பிரேமச்சந்திர ஆகியோரின் நாடாளுமன்றப் பதவிகள் செல்லாது என்ற அவர்களுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பை காரணம் காட்டி சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அனுர இராஜினாமா செய்தார். சுதந்திரக் கட்சி மூலம் தான் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஐதேகவுக்கு வழங்க அவர் தயாராக இருக்கவில்லை என்பதும் அதற்கொரு காரணம்.



இருப்பினும் அவரைத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்குவதற்கு ஐ.தே.க. கட்சித் தலைமையும் அதன் பொதுச் செயலாளரும் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்றவேண்டி இருந்தது.

அந்தக் காலத்தில் ஆயுர்வேத வைத்திய நிபுணர் டபிள்யூ.ஐ.பெர்னாண்டோ அல்லது 'கொண்டா வேதமத்திய' பிரேமதாஸவினால் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்டிருந்தார். பிரேமதாசா ஆயுர்வேதத்தை மிகவும் விரும்பினார், மேலும் உள்ளூர் ஆயுர்வேத மருத்துவத்தை சர்வதேச அளவில் மேம்படுத்தவும் விரும்பினார். அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான வழிகளைக் கண்டறிய விரும்பிய அவர், ஆயுள்வேதத்தை அதிலொன்றாக அடையாளம் கண்டார். அதற்காகவே கோண்டாவெட டபிள்யூ.ஐ.பெர்னாண்டோ நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டார். ஜனாதிபதி விஜேதுங்கவும், சிறிசேனா குரேயும் பதவி விலகுமாறும், அநுராவை நாடாளுமன்றத்திற்கு வர அனுமதிக்குமாறும் கோரியபோது, கொண்டவேட நிபந்தனையின்றி இணங்கி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார்.



அநுர நாடாளுமன்றத்திற்கு வந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தார். அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டார். சுதந்திரக் கட்சி மூலம் தாம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைக்க விரும்பியிருந்தால், தன் மீது குற்றப்பத்திரிகை முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்து அனுர நீதிமன்றத்தை அணுகியிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. 1989 பொதுத் தேர்தலில் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் அனுர. கட்சியின் தலைவர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கு அடுத்து வாக்குகளைப் பெற்றிருந்தார். அப்படியிருந்தும் அந்தக் கட்சி மூலம் தனக்குக் கிடைத்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைக்க அவர் முயலவில்லை. ஏனெனில் அந்த வாக்குகள் கட்சிக்கு அளிக்கப்பட்டவை என்று அவர் கூறினார். மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றப் பதவியைக் கட்சிக்காக உதறிவிட்டு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குச் சென்றார்.

அனுர ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் வந்தபோது, அவருடன் சேர்ந்து மேலும் பல சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் தரப்புக்கு வந்தனர். ஆனால், ஜனாதிபதி விஜேதுங்கவினால் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சிறிது காலம் முன்னதாகவே அவர்கள் எல்லோரும் ஆளும் தரப்புக்குத் தாவினர். அதற்கு முன்னர் கட்சி மாறினால் தங்கள் நாடாளுமன்றப் பதவி பறிக்கப்படும் என்று அவர்கள் அஞ்சியதே அதற்குக் காரணம்.

இந்த அச்சத்தை ஜே.ஆர். தனது அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனதில் விதைத்தார். 1994இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா இந்த அச்சத்தை நீக்கினார்.

எதிர்க்கட்சியைவிட சந்திரிகாவுக்கு நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனமே அதிகமாக இருந்தது. சந்திரிகா பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவை உடைக்க விரும்பினார். ஐக்கிய தேசியக் கட்சியை துண்டு துண்டாக உடைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் தரப்புக்குக் கொண்டு வந்து அமைச்சர்களாக்கினார். அப்படி அவர்களைக் கட்சி தாவ வைப்பதற்காக, அரசமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைச் சட்டங்களுக்கு வெவ்வேறான, வித்தியாசமான வியாக்கியானங்களை வழங்கும் வகையில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவையும் வேறு நீதியரசர்களையும் நியமித்தார். அதன்படியே அரசமைப்பின் பிரிவுகளுக்கும் லலித், காமினி மற்றும் பிரேமச்சந்திர ஆகியோருக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளுக்கும் வித்தியாசமான விளக்கங்களை நீதியரசர்கள் வழங்கினர்.

(8ஆம் பக்கம் பார்க்க...)




# சீனாவின் வியாபாரம் வடக்கிலும் ஆரம்பம்

கடந்த சில காலமாக சீனாவின் உற்பத்திகளை இலங்கையின் தென் மற்றும் மேல் மாகாணங்களில் விற்பனை செய்வதுமற்றும்வியாபாரங்களில் ஈடுபடுவது என ஆரம்பித்திருந்தனர். இந்நிலைமை, தற்போது வடக்கிலும் ஆரம்பித்துள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சினோபெக் நிறுவனம் பெற்றோல் விநியோகத்தை ஆரம்பித்த நிலையில் செவ்வாய்கிழமை மானிப்பாய் மெமோறியல்வீதியில்சினோபெக் ஒயில் வகைகளை அறிமுகம் செய்து விநியோக முகவரை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒயில் நிறுவனத்தின் இலங்கையின் ஏக விநியோகஸ்தரான இன்டர்நனல் லுப்ரிக்கட் பிறைவட் லிமிட்டட் நிறுவனமானது யாழ்ப்பாணத்திற்கான தனது விநியோகஸ்தராக கோல்ட் மவுன்ட் பிறதர்ஸ் பிறைவட் லிமிட்டட் என்னும் நிறுவனத்தை செவ்வாய்க்கிழமைமானிப்பாயில் ஆரம்பித்துள்ளது.

இந்நிகழ்வில்பங்குதாரர்களான பிரதானநிறைவேற்றுப்பணிப்பாளர் ஜயசாந்ததொட்டஹேவகே, தேசிய விற்பனை முகாமையாளராக துசிதகுமார, விற்பனை முகாமையாளர்எம்.குகன்விருந்தினர்களாக கலந்துகொண்டதுடன்சினோபெக் எரிபொருள் விற்பனை முகாமையாளர்கள், வாகன திருத்துநர்கள், வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05)

# இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் 400 யானைகள் சாவு

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 400 யானைகளின் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன சூரியபண்டார கூறுகையில் - இலங்கையில்சுமார் 6,000 யானைகள் மாத்திரமே காணப்படுகின்றன. இதில் கிட்டத்தட்ட 200 யானைகள் மோதல்கள், துப்பாக்கிச்சூடுகள் மற்றும்வாகன விபத்துக்கள் போன்ற பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக உயிரிழந்துள்ளன.

மேலும், பல்வேறு நோய் காரணமாகவும் யானைகள் உயிரிழந்துள்ளன என அவர் தெரிவித்தார். (05)

# புதிய மத்திய பஸ் நிலையத்திலிருந்து முல்லைத்தீவில் சேவைகள் ஆரம்பிப்பு

முல்லைத்தீவு புதிய மத்திய பஸ் நிலையத்திலிருந்து பஸ் சேவைகள் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகரத் திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு நகரில் அமைக்கப்பட்ட புதிய மத்திய பஸ் நிலையத்தின் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் 2020 ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டபோதும்இதுவரை காலமும் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

நகரத் திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில்குறித்தகட்டட தொகுதி மீள் திருத்தம்செய்யப்பட்டுசிலவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் நூறு வீதம் வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் பேச்சு ஒன்றின் ஊடாக ஆறு மாத காலப்பகுதிக்குள் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்து தருவதாக வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் மத்திய பஸ் நிலைய கட்டடத்தொகுதியில் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

குறித்தநிகழ்வில்மாவட்டஅரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மாவட்ட செயலக உதவிதிட்டமிடல்பணிப்பாளர்கணேசமூர்த்திஜெயபவானி, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சண்முகதாசன், கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் பிரதிநிதி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், தனியார்பஸ்உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மீன்கள் இறக்குமதி குறித்து டக்ளஸ் அதிரடித் தீர்மானம்

இலங்கையில் அறுவடை செய்யப்படாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரி விக்கையில் -

இலங்கைகடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இலங்கையில் மிக குறுகிய அளவில் அறுவடை செய்யப்படுகின்ற அல்லது அறுவடை செய்யப்படாத மீன்களை தான் இறக்குமதி செய்ய வேண்டும் என இலங்கை கடற்தொழில் கூட்டுஸ்தாபனத்துக்குப் பணிப்புரை விடுத்திருந்தேன். நியாயமான விலையில், தரமானதாக, திணைக்களத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும். இவ்வாறே இறக்குமதி செய்ய முடியும் எனக் கூறியிருக்கின்றேன். அந்தவகையில் தான் இறக்குமதி செய்ததாக கூறுகிறார்கள். அதில் முறைகேடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு இருக்குமாக இருந்தால் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் ஊடகங்களில் தவறான செய்திகள் வெளி வந்துள்ளன. இதுதொடர்பாகஆராய்ந்து கொண்டிருக்கின்றேன். - இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 350/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சீனாவின் துறைமுக நகரத்திற்கு ஆதரவளிக்கும் டேவிட் கமரூன்

## பிரிட்டனின் தமிழ் கென்சவேர்ட்டிவ்கள் கடும் அதிருப்தி



பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் கொழும்பு துறைமுக நகர திட்டத்தை அங்கீகரிக்கும் விதத்தில் செயற்படுகின்றமை தொடர்பாக பிரிட்டனின் தமிழ் சமூகம் கடும் ஏமாற்றமடைந்துள்ளது என தமிழ் கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் புதியபட்டுப்பாதை திட்டத்தின் ஒரு பகுதியான கொழும்புதுறைமுகநகர திட்டத்திற்கு டேவிட் கமரூன் ஆதரவளிப்பது குறித்து பிரிட்டனின் தமிழ் சமூகத்தினர் ஆழ்ந்த ஆச்சரியமும் திகைப்பும் அடைந்துள்ளனர் என பிரிட்டிஸ் தமிழ் கென்சவேர்ட்டிவ்களின் செயலாளர் கஜன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட முதல் பிரிட்டிஸ் பிரதமர் டேவிட்கமரூன். இலங்கை அரசாங்கத்தின் பாரிய அநீதிகள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் பரப்புரை செய்த முதல் உலக தலைவர் நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பது தொடர்பில் அவர் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்தார் எனவும் கஜன்ராஜ் தெரிவித்துள்ளார்.

டேவிட் கமரூன் இலங்கைக்கு சென்றவேளை இந்த பிரச்சினை( நீதி) உலகின் கவனத்தை விட்டு அகலாது என்பதே நான் உங்களிற்கு தெரிவிக்கும் செய்தி இதனை மேலும் தீவிரமாக முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார் எனவும் கஜன்ராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை இன்னமும் பொறுப்புக்கூறலையும் நீதியையும் வழங்காதபோதிலும் டேவிட் கமரூன் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளிற்கு ஊக்கமளிப்பதை நாங்கள் காண்கின்றோம் எனவும் தெரிவித்துள்ள அவர், இது ஆழ்ந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

டேவிட் கமரூன் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள நாடுகளின் திட்டங்களிற்கு உதவுவதற்கு பதில் மனித உரிமை நீதி போன்ற உயர்நோக்கம் கொண்ட கொள்கைகளிற்கு குரல்கொடுப்பதில் மீண்டும் ஈடுபடுவார் என எதிர்பார்க்கின்றோம் எனவும் பிரிட்டிஸ் தமிழ் கென்சவேர்ட்டிவ்களின் செயலாளர் கஜன் ராஜ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை டேவிட் கமரூனின் இந்த மன மாற்றம் ஆச்சரியமளிக்கவில்லை எனவும் பிரிட்டனின் தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

இது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான் என தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் தலைவர் சென் கந்தையா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடரும் தமிழர்களின் துயரங்களை கென்சவேர்ட்டிவ்களின் மற்றுமொரு தலைவர் அலட்சியம் செய்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் 13 வருடகாலமாக கென்சவேர்ட்டிவ்கள் ஆட்சி புரிகின்றனர் இன்றுவரை யுத்த குற்றங்களிற்காக இலங்கையை சேர்ந்த ஓர் இராணுவ அதிகாரி அல்லது அதிகாரிக்கு எதிராக தடைகள் விதிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள அவர், மனித உரிமை மீறல்களை கருத்தில் கொள்ளாமல் பிரிட்டனிற்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக உறவுகள் அதிகரிப்பதை நாங்கள் பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# பிக்கு மீது தாக்குதல்: பணப்பை கொள்ளை

## சிலாபத்தில் சம்பவம்

இத்தாலிக்கு செல்லத் தயாராக விருந்த பௌத்த பிக்கு ஒருவரை தாக்கி அவரிடமிருந்த 112 யூரோக்கள் மற்றும் 7 லட்சம் ரூபா இலங்கைப் பணம் அடங்கிய சூட்கேஸை கொள்ளையிட்டுச் சென்ற நபரை கைது செய்ய சிலாபம் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான தேரர் இத்தாலியில் வசிப்பவர் எனவும், இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு மீண்டும் இத்தாலி செல்லவிருக்கிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பிரதேசத்தில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் நபர் ஒருவர் இந்த தேரரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் கையிலிருந்த பணம் அடங்கிய பையை பறித்துச் சென்றுள்ளார்; எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பண்டாரவளை விருந்துபசாரத்தில் உணவருந்திய இளைஞர் உயிரிழப்பு



பண்டாரவளையில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் உணவருந்திய இளைஞர் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தேசிய நீர் வழங்கல் சபையின் ஒப்பந்த அடிப்படையில் சேவைகளை வழங்கும் நிறுவனத்தில் பணிபுரியும் ஹசித் ஆரியவன்ச என்ற அகலவத்தை சந்தகிரி கந்த ஓமட்ட வீதியை சேர்ந்த 24 வயது இளைஞர் ஆவார்.

இவர் அவரது நிறுவனத்தில் பணிபுரியும் மற்றுமொரு நபருடன் வசித்து வந்தார் எனவும் இருவரும் மாலையில் விருந்துபசாரத்தில் உணவருந்தினர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் உடன் வசிக்கும் நபர் நள்ளிரவு ஒரு மணியளவில் எழுந்து பார்க்கும் போது மாடியில் மின் விளக்குகள் எரிவதை கண்டுள்ளார் அதை பற்றி விசாரிக்க சென்றபோது குறித்த நபரின் வாயிலிருந்து திரவ பொருள் ஒன்று கசிந்த நிலையில் இறந்து கிடந்ததைக் கண்டு அவர் அயல்வீட்டாரை தொலைபேசி அழைப்பில் தகவல் வழங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir



# மூன்று புதிய தூதுவர்கள் ஜனாதிபதியிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்தனர்

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான மூன்று தூதுவர்கள் செவ்வாய்க்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

சுவிற்ஸர்லாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்ட தூதுவர்களின் பெயர்கள் பின்வருமாறு -

இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கொஷ் கார்மென் மோரேனோ இலங்கைக்கான ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கொஷ். (05)

# 'இந்திய வம்சாவளியினர்' என பதிவிடலாம் பதிவாளர் நாயக திணைக்களம் ஒப்புதல்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழில் இனத்தை இந்திய வம்சாவளியினர் என்பதை நீக்கி பதிவாளர் நாயகத்தால் வெளியிட்ட சுற்றுநிரூபத்திற்கு இ.தொ.கா கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

பதிவாளர்நாயகத்தின்சுற்றுநிரூபத்திற்கு இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டிராமேஷ்வரன் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு சென்றும் இருந்தனர்.

இ.தொ.காவின் தொடர் அழுத்தத்தால் மீண்டும் இந்திய வம்சாவளியினர் என்று பதிவிடலாம் என்ற ஒப்புதல் கடிதத்தை இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானுக்கு எழுத்து மூலம் பதிவாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். (05)

# சிலாவத்துறை ம.ம. வித்தி.யில் புதிய இரு மாடிக் கட்டடம் திறப்பு



மன்னார் சிலாவத்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 'குவைத் ஸகாத்' நிறுவனத்தால் புதிய இரண்டு மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா திங்கட்கிழமை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கு இணங்க 'குவைத் ஸகாத் ஹவுஸ்' நிதியுதவியுடன் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலவிடப்பட்ட தொகை 200 லட்சம் ரூபாவாகும். இந்தப் பாடசாலையில் சுமார் 350 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இரண்டு தளங்களைக் கொண்ட, கீழ் தளத்தில் 3 வகுப்பறைகளும், மேல் தளத்தில் பிரதான மண்டபமும் உள்ளன.

இதன்போது, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், இலங்கைக்கான குவைத் பிரதித் தூதுவர் பத்ர் அல்னோவைம், குவைத் ஸகாத் ஹவுஸின் பணிப்பாளர் நாயகம் மஜீத் எஸ்.எம்.எஸ். அலசெமி மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர். (05)

# கணிதப் போட்டியில் 11 நாடுகளுடன் சாதனை படைத்த 7 வயது மாணவி!

கொழும்பு, சைவமங்கையர் வித்தியாலயத்தில் தரம் இரண்டில் கல்வி கற்கும் மாணவி மகேஷ்வரன் விவிஷனா தனியார் கல்வி நிறுவனமொன்று ஏற்பாடு செய்திருந்த 11 நாடுகள் பங்கேற்ற கணிதப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற இந்தக் கணித போட்டியில் இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், ஐக்கிய அரபு இராச்சியம், தன்சானியா, பஹ்ரைன், பங்களாதேஷ், நியூஸிலாந்து, கிரேஸ், சைப்ரஸ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.



இதில் கூட்டல், கழித்தலை உள்ளடக்கிய 80 கணக்குகளை 5 நிமிடங்களுக்குள் செய்து முடிக்கும் போட்டியில் ஏனைய நாட்டு மாணவர்களுடன் ம.விவிஷனாவும் பங்கேற்றிருந்தார். குறித்த 5 நிமிடங்களுக்குள் சுமார் 55 கணக்குகளை மனக்கணிதத்தில் செய்து அவர் சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

அது மாத்திரமன்றி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து பல மாணவர்கள் பங்குபற்றிய கணிதப் போட்டியிலும் பங்குபற்றிய அவர் அதில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மகேஷ்வரன், தர்ஷினி தம்பதிகளின் புதல்வியான விவினா கணிதத்தில் மாத்திரமன்றி ஏனைய பாடவிதான செயற்பாடுகளிலும், வரைதல் மற்றும் நடனமாடுதல் என்பவற்றிலும் திறமையானவராவார்.

தனது மகளின் சாதனை குறித்து கருத்து வெளியிட்ட விவினாவின் தாயான தர்ஷினி மகேஷ்வரன், 'எனது மூத்த மகன் ஒட்டிசத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவரால் கல்வி செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. இது எனக்கு ஒரு பாரிய மனக்குறையாகக் காணப்பட்டது. எனினும், எங்களின் கவலைகளை போக்கும் வகையில் எனது மகள் இந்த சாதனையை படைத்திருக்கின்றார். இதே போன்று அவர் கல்வியில் தொடர்ந்தும் சாதனைகளைப் படைக்க வேண்டும் என்பதே பெற்றோராக எமது விருப்பமும், வேண்டுதலுமாகும்.- என்றார். (05)

# குடு சலிந்துவின் உதவியாளர் கைது

*சுமார் இரண்டு கோடி பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளுடன் குடு சலிந்துவின் உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*குறித்த நபர் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாணந்துறை அலுபோமுல்ல பகுதியில் வைத்து செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்த போது, 1 கிலோ 40 கிராம் 'ஐஸ்' போதைப் பொருளையும் 20 மில்லியன் ரூபா பணத்தையும் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர் பாணந்துறை திக்துடுவ வீதியில் வசிக்கும் 31 வயதுடையவராவார். சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.*

# ரயிலுடன் மோதி காட்டு யானை பலி

மின்னேரியா, பட்டுஓய பகுதியில் ரயிலுடன் மோதி காட்டு யானையொன்று உயிரிழந்துள்ளது. செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி குறித்த காட்டு யானை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

30 வயது மதிக்கத்தக்க யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 400 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என வனஜீவராசிகள் திணைக்களத்தின் யானைகள் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், யானை - மனித மோதலால் சுமார் 191 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி துப்பாக்கி சூட்டில் 72 யானைகள், மின்சாரம் தாக்கி 45 யானைகள், வெடி பொருள்களுக்கு சிக்குண்டு 37 யானைகள், விப் பொருள்கள் உட்கொண்டமையால் 3 யானைகள், ரயில் விபத்தில் 16 யானைகள், விவசாய நிலங்களுக்குள் புதையுண்டு 3 யானைகள், கிணறுகள் மற்றும் பிற விபத்துகளால் 15 காட்டு யானைகள் இறந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல காட்டு யானைகள் அதிகம் துப்பாக்கிச்சூடு மற்றும் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதுடன் வெள;வேறு நோய்களாலும் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் 6,000 யானைகளே இருக்கின்றன எனவும் மனித நடவடிக்கைகளின் காரணமாக வசிப்பிடங்களை இழந்துள்ள காட்டு யானைகள் கிராமங்களுக்குள் ஊடுருவும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மூடப்பட்ட சலூன் கடை....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதுவே நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஒரு கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மற்றொரு கட்சிக்கு மாறுவதை ஊக்கப்படுத்தும் ஏணியாக மாறியது. மகிந்த பிரதமாகத் தெரிவாகியதும் இந்தக் கட்சி தாவும் அலையைத் துரிதப்படுத்தினார்.

''என் சட்டைப் பையில் குட்டி யானைகள் உள்ளன. என் சலூன் கதவு திறந்தேயிருக்கிறது...'' என்று கூறிக்கொண்டு எதிர்த்தரப்பான ஐ.தே.கவிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை இழுத்தெடுத்தார். அப்படி அவர் இழுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 17.

2015 இல் சலூன் கதவு பற்றிக் கூறிய மஹிந்தவை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி மஹிந்தவின் கட்சியின் செயலாளர் நாயகம் மைத்திரிபால மற்றும் ஒரு குழுவினர் திடீரென எதிர்க்கட்சிக்குச் சென்றனர். அதன் பின்னர் மைத்திரி - ரணில் ஆட்சி சலூன் கதவைத் திறந்தது. மகிந்தவின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் உடைந்து உருண்டு அந்த ஆட்சியில் இணைந்தனர். கோட்டாபய ஜனாதிபதியாகி பின்னர் ''புதிய சலூனை'' திறந்து வைத்தார்.

2015இல் மைத்திரி -ரணில் ஆட்சியில் நிறைவேற்று ஜனாதிபதி முறையின் சிறகுகளை வெட்டிவிட்டு சுதந்திர ஆணைக்குழுக்களை உருவாக்க சலூனைத் திறந்தது. 2019 இல், கோத்தபாய ஜனாதிபதியாகி மீண்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையைப் பலப்படுத்தினார்.

அந்தத் திருத்தம் இல்லாமல் கோட்டாபய முட்டாள்தனமாகச் செயற்பட்டிருக்க மாட்டார். பஸில் நிதி அமைச்சராகியிருக்க மாட்டார். நாடும் திவாலாகியிருக்காது.

இன்றைய ஆட்சியும் நாடாளுமன்றமும் இவற்றுக்கெல்லாம் மாறானது. ரணிலை தோற்கடிக்க பொது ஜன பெரமுன 2019இல் ஆணை கேட்டது.

இன்று அதே பொது ஜன பெரமுன ரணிலை ஜனாதிபதியாக்கியுள்ளது. பொது ஜன பெரமுன கட்சியின் மத்திய குழு அல்லது செயற்குழுவின் ஒப்புதலின் பேரில் அவர் ஜனாதிபதி ஆக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் அனுமதியுடன் பிரதமர் பதவியையோ அல்லது பொது ஜன பெரமுனவின் தலைவர் பதவியையோ ரணில் ஏற்கவில்லை. ஐதேக 2020 இல் ராஜபக்ச மற்றும் பொது ஜன பெரமுனாவிற்கு எதிராக ஒரே ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தை மட்டுமே வென்றது. இருப்பினும் ரணில் ஜனாதிபதியான நாளில் இருந்து புதிய சலூன் திறக்கப்பட்டது.

அது முதல்

''ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 40 பேர் வருகின்றனர்''

''ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 20 பேர் வருகின்றனர்'

''பொது ஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சென்ற 40 பேர் கொண்ட குழு'''

என்று, சலூன் கதவு நிறுவப்பட்ட பின்னர் ரணிலின் ஆட்சி சொன்னது இதுதான். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தனது உறுப்பினர் நஸீர் அகமட்டை நீக்கியது சரியென உயர் நீதிமன்றம் முடிவு செய்து தீர்ப்பை வழங்கி சலூன் கடையை மூடிவிட்டது. இந்த சலூன் கதவு திறந்திருந்தவரை நாட்டில் பயனுள்ள எதுவும் நடக்கவில்லை.

''நாளை யார் குதிப்பது..?''

''மறுநாள் குதிப்பது யார்...?''

சந்திரிகாவின் காலத்திலிருந்தே, இந்தக் குரங்கு நடனத்தை மக்கள் பார்த்து வருகின்றனர். இந்தக் குரங்கு நடனம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அரசில் இணைய வேண்டுமாயின், அரசுக்கு எதிராக வெற்றி பெற்ற வாக்காளர்களை அவரது கட்சிக்காக வாக்களித்த மக்களிடமே திரும்ப பெற்றுக்கொடுக்கவேண்டும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படவேண்டும், அநுரவின் ஜென்டில்மேன் அரசமைப்பைப் பின்பற்றவேண்டும்.

''உங்கள் மரியாதை, சிதைவை மீண்டும் உயிர்ப்பிக்கவும்..''

மக்கள் உயர் நீதிமன்றம் அமைந்திருக்கும் (Hultsdorf) பக்கம் திரும்பி இவ்வாறு கெஞ்சுகின்றனர்


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# பலஸ்தீன - இஸ்ரேல் மோதலை முடிவுக்கு கொண்டுவர சர்வதேசம் முன்வர வேண்டும்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கோரிக்கை



கடந்த 7 ஒக்ரோபர் 2023 இல் ஹமாஸ் இயக்கத்தின் தாக்குதலுடன் மீளவும் புதுப்பிக்கப்பட்ட பலஸ்தீன - இஸ்ரேல் யுத்தமானது பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்களை இருதரப்பிலும் மனிதாபிமானமற்ற முறையில் காவுகொண்டபடி முடிவற்று நீண்டுகொண்டிருப்பதையிட்டு நாங்கள் ஆழ்ந்த கவலையடைகிறோம். எவ்விதத்திலும் நியாயப்படுத்தப்படமுடியாத ஹமாஸ் இயக்கத்தின் ஏவுகணை தாக்குதல்களை கண்டிக்கும் அதே வேளை, அப்பாவி பாலஸ்தீனியர்கள்மீது வலிந்து திணிக்கப்பட்டிருக்கும் போரும், அதன் விளைவான உயிர்பலிகளும் காயங்களும் காட்டாய இடப்பெயர்வும் நாகரீகமடைந்த எந்தவொரு சக்தியாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின்பொதுச்செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

காஸா என்ற திறந்தவெளி சிறையில் பல பத்தாண்டுகள் சொல்லொணா துயரத்தில் வாடும் பலஸ்தீனியர்கள் மீது அண்மைய தாக்குதலின் தொடர்ச்சியாக திணிக்கப்பட்டிருக்கும் தடைகள், அவர்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறுவதோடு அங்கே வசிக்கக்கூடிய இரண்டு மில்லியன் மக்களுக்கும் மேற்பட்டவர்களை உணவு, நீர், மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைக்கூட அடையமுடியாத நிலைக்குத் தள்ளியிருக்கிறது. தொடர்ச்சியான விமான-ஏவுகணைத்தாக்குதல்கள் வசிப்பிடங்களையும் ஏலவே பற்றாக்குறையால் வாடும் மருத்துவமனைகளையும் தொடர்ந்தும் இலக்குவைத்திருப்பது ஒரு மாபெரும் மனிதப்பேரழிவைநோக்கிபலஸ்தீனிய பொதுமக்களை இட்டுச்செல்வதையிட்டு நாங்கள் வருத்தமடைகிறோம்.

போரின் மூலம் நிலைத்திருக்கக்கூடிய தீர்வுகளை எட்டமுடியாது என்ற பட்டறிவின் அடிப்படையில் உடனடியாக சம்பந்தப்பட்ட இரு தரப்பும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவருவது கட்டாயமாகும். அதே வேளை சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளித்து இருதரப்பிலும் பலவந்தமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யுமாறும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

அரைநூற்றாண்டுகள் கடந்தும் முடிவுறாது தொடரும் பலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வொன்றை சர்வதேச சமூகம் தாமாதிக்காதுபெற்றுக்கொடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் மீளவும் ஒரு மனிதப்பேரவலம் ஏற்படாதவாறு தடுக்கும் பாரிய பொறுப்பு சர்வதேசசமூகத்துக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் நினைவுறுத்துகிறோம்.

ஒரு சிறு நிலப்பரப்பில் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த அமைதிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய மேற்படிபோரானது அழிவுகளைத் தவிர வேறொன்றையும் விட்டுசெல்லப்போவதில்லை என்பதை நாங்கள் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். பொருத்தமான உடனடி நடவடிக்கைகளின் மூலம் வளைகுடாவில் அமைதியையும் சமாதானத்தையும்ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் வலியுறுத்துகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# முதுமையில் உள்ள சம்பந்தன் பதவியைத் துறக்க வேண்டும்!

## சுமந்திரன் பகிரங்க கோரிக்கை



இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் பங்களிப்புச் செய்யமுடியாதிருப்பதன் காரணமாக அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாகக் கோரியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்றபோது, 288 நாடாளுமன்ற நாள்களில் வெறுமனே 39 நாள்களில் தான் நாடாளுமன்றத்துக்கு இரா. சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு நாடாளுமன்ற படிகளாக 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4 லட்சத்து 19 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதுமக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றி பேசப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இதுவொரு மாற்றுவடிவமாக அமைகின்றதா? என்று வினவப்பட்டபோது பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்கு வருகை தர முடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

அந்தவகையில் நான் ஒருவிடயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாகப் பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தினார். 2020ஆம்ஆண்டுநாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலைமக்கள்தன்னை அந்தமாவட்டத்தின் முதலாம் நபராகத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் தனது உடல்நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவு படுத்தினார்.

எனினும், திருகோணமலை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்து செயற்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்து-வரும் காலத்தில் அதுதொடர்பான சில நடவடிக்கைகளை எடுப்போம். - என்றார். (05)

# தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த வயோதிப் பெண் யாழ்.பொலிகண்டியில் சாவு!

தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வயோதிப் பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் -பொலிகண்டி தெற்கைச் சேர்ந்த 67 வயதுடைய ஜெயேந்திரன் சோதிமலர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிப் பெண் திங்கட்கிழமை இரவு தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரென மயங்கிச் விழுந்துள்ளார்.

அதனை அடுத்து அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர். இந்நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஹரக்கட்டாவை சிஐடியினரிடமிருந்து மீட்டு செல்வதற்காக தாக்குதல் திட்டம்

## நீதிமன்றத்தில் தகவல்

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பாதாள உலக குற்றவாளி ஹரக்கட்டா உட்பட குறிப்பிட்ட குழுவினரை மீட்டுச் செல்வதற்காகத் தாக்குதலொன்றை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ள என சிஐடியினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

கொழும்புகோட்டை நீதிவான் திலினகமகே முன்னிலையில் சமர்ப்பித்துள்ள விவரங்களில் சிஐடியினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களைநீண்டநேரம் விசாரணை செய்த வேளை ஹரக்கட்டாவையும் ஏனைய-வர்களையும்சிஐடியினரிடமிருந்து மீட்டுசெல்வதற்கான தாக்குதல் திட்டம் குறித்து தெரியவந்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து முழுமையான விசாரணைகள்இடம்பெறுகின்றன எனவும் சிஐடியினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இதனை ஆராய்ந்த நீதிவான் இது குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைசமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

திட்டமிட்ட குற்றச்செயல்கள் குறித்த விசாரணைக்காக பொலிஸார் ஹரக்கட்டாவையும் சகாவையும்தடுத்துவைத்துள்ளனர் - ஹரக்கட்டா மடகாஸ்கரிலிருந்து நாடு கடத்தப்பட்டார். (05)

# ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மூதாட்டி விபத்தில் சிக்கி சாவு!

ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மூதாட்டி, செவ்வாய்க்கிழமை லொறியொன்றால் ஏற்படுத்தப்பட்ட விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - நீர்வேலி மேற்கைச் சேர்ந்த 72 வயதுடைய தனபாலசிங்கம் மகேஸ்வரி என்பவரே உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி இராசவீதி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில், பொங்கல் நிகழ்வில் மூதாட்டி ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, வீதியில் வேகமாக வந்த லொறி , வேக கட்டுப்பாட்டை இழந்து ஆலயத்துக்கு அருகில் நின்ற வாகனத்தில் மோதியதால், குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில், 30 வயதான லொறியின் சாரதி கைதுசெய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக்காக குறுகியகால மூலோபாயங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு

கொவிட் தொற்று நிலைமையால் இழக்கப்பட்ட தமது சுற்றுலாத்துறை சந்தைப்பங்குகளை மீண்டும் உரித்தாக்கிக் கொள்வதற்காக பல ஆசிய சுற்றுலாப் பயண முடிவிடங்கள் தற்போது கடுமையான போட்டிக்குள் இயங்குகின்றதுடன், பல நாடுகள் சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணம் அறவிடாமல் இலவசமாக விசா வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் தொற்று, அத்துடன் பின்னர் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியால் பின்னடைவைச் சந்தித்துள்ள எமது நாட்டின் சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சிக்காக புதிய சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 3 வருடங்களில் இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 மில்லியன்களாக அதிகரிக்கின்ற இலக்குடன் கூடியதாக பிரதமர், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமையவே எதிர்வரும் 2024.03.31 ஆம் திகதி வரை சீனா, இந்தியா, ரஷ்யா, தாய்லாந்து, இந்தோனிசி-யா, மலேசியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச சுற்றுலா விசா வழங்கு-வதற்கான வேலைத்திட்டத்தின் முன்னோடி செயற்றிட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அது மாத்திரமின்றி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உலக மரபுரிமை மற்றும் வரலாற்று மையங்களில் நெரிசலின்றி பிரவேசிப்பதற்காக கட்டணம் அறவிடுகின்ற அனைத்து இடங்களுக்கும் ஒரே தடவையில் கட்டணம் செலுத்துகின்ற பக்கேஜ் முறையிலான நுழைவுச்சீட்டை விமான நிலையத்தில் அல்லது இணையவழி ஊடாகக் கொள்வனவு செய்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரயில் சேவையின் சுற்றுலாப் பயணிகள் புகையிரதக் கூடத்திற்கான தேவையான பிரயாணச் சீட்டுக்களை இணையவழி ஊடாக அல்லது ஒரே தடவை செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொது பிரயாணச்சீட்டை விமானநிலையத்தில் கொள்வனவு செய்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. (05)

# ஐ.நா. மனித உரிமை பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்துவதால் தீர்வை அடையமுடியாது!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. சுட்டிக்காட்டு

மேற்குலக நாடுகளைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் என்பது வெறுமனே பேரம் பேசுவதற்கான கருவி மாத்திரமே என்பதையே இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

எனவே பொறுப்புக்கூறல் விடயத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவைக்குள்மாத்திரம்மட்டுப்படுத்துவதன்மூலம்பாதிக்கப்பட்ட தரப்பினருக்குஎவ்விததீர்வும்கிட்டாது. மாறாக இவ்விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதன் மூலமே பொறுப்புக்கூறலைஉறுதிப்படுத்தமுடியும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பால் கடந்த 7 ஆம் திகதி தென் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தீவிரமடைந்துள்ள இஸ்ரேல் - ஹமாஸ் மோதலின் நீட்சியாக கடந்த சில வாரங்களாக காஸாவில் இஸ்ரேலிய படையினர் நடத்திவரும் தாக்குதல்களால் சிறுவர்கள் உட்பட பெருமளவானோர் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் தற்போது-வரை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற் குலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதர வளித்துவருவதுடன் இம் மோதலை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடு கள் சபை முன்னெடுத்துவரும் முயற்சிகள் போதுமானவையன்று என்றவிமர்சனங்களும்முன்வைக்கப்



பட்டுவருகின்றன.

இவ்வாறானதொருபின்னணியில் தற்போது காஸாவில் பதிவாகிவரும் படுகொலைகளையும், இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற படுகொலைகளையும் ஒப்பிட்டு பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டுவருகின்றனர்.

அந்தவகையில் இதுபற்றிக் கருத்துவெளியிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மேற்குலக நாடுகளைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் என்பது வெறுமனே பேரம்பேசுவதற்கான கருவி மாத்திரமே என்பதையே இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் தெளிவாக உணர்த்துவதாகத் தெரிவித்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கை விவகாரத்தைப்பொறுத்தமட்டில்மேற்குலக நாடுகளின்நகர்வுகளுக்குஏற்பநாமும் காய்களைநகர்த்தவேண்டுமேதவிர, வெறுமனே அவர்கள் கூறுவதை மாத்திரம் செய்பவர்களாகவோ, அவதானிப்பாளர்களாகவோ இருக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி'ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அனைத்து அமர்வுகளிலும்பலஸ்தீன விவகாரம் குறித்துப் பேசப்படுகின்ற போதிலும், அதனால் என்ன பயன் அடையப்பட்டிருக்கின்றது?' எனக் கேள்வி எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம்ஆராயப்படுவதும்இதனை ஒத்தது தான் என்று குறிப்பிட்டார்.

'இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கம்எக்காலத்திலும்நீங்கப்போவதில்லை. எனவேஇலங்கைவிவகாரத்தை சர்வதேச அரங்கில் பேசுபொருளாக வைத்திருக்கவேண்டிய தேவை மேற்குலக நாடுகளுக்கு உண்டு. அதன்மூலம் எதிர்காலத்தில் சீனசார்பு அரசாங்கமொன்று ஆட்சி பீடமேறினால், அதன்மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கு இவ்விவகாரத்தைப் பயன்படுத்தமுடியும். எனவே பொறுப்புக்கூறல் விடயத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வித தீர்வும் கிட்டாது' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறானதொருபின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நாடுவதாக இருந்தால், இவ்விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதன் ஊடாக மாத்திரமே அதனை அடைந்துகொள்ளமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

(05)

# பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் சட்டத்தரணிகள் சங்கம் சந்திப்பு



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் மற்றும் நிகழ்நிலைக்காப்பு சட்டமூலம் என்பன பற்றியும், அச்சட்ட-மூலங்கள் தொடர்பில் தமது சங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கௌல்ய நவரத்ன, இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்குக்கு விளக்கமளித்துள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கௌல்ய நவரத்ன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள சட்டத்தரணிகள் சங்க கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது தற்போதைய மனித உரிமைகள்நிலைவரம்உள்ளடங்கலாக நாட்டின் சமகாலப் போக்கு தொடர்பில்விரிவாகக்கலந்துரையாடப்பட்டது. குறிப்பாகஅண்மையகாலங்களில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலங்கள் குறித்து உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்கிடம் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி கௌல்ய நவரத்ன, அச்சட்டமூலங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பது பற்றியும் விளக்கமளித்தார்.

விசேடமாக உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் மற்றும் நிகழ்நிலைக்காப்பு சட்டமூலம் என்பன பற்றியும், நிகழ்நிலைக்காப்பு சட்டமூலம் தொடர்பில் தமது சங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் கௌல்ய நவகுரத்ன உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்தார்.

அதேவேளை இச்தச் சந்திப்பு தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (ருவிட்டர் பக்கத்தில்) பதிவொன்றைச் செய்திருக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதிலும், மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதிலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கொண்டிருக்கும் மிகமுக்கிய வகிபாகம்தொடர்பில்இதன்போது கலந்துரையாடியதாக அதில் குறிப்பிட்டுள்ளார். (05)

# மாத்தறை மாவட்டத்தின் சிலபகுதிகள் நீரில் மூழ்கின

சீரற்ற வானிலை காரணமாக கடும் மழையால் நில்வலா ஆறு நிரம்பி வழிந்து மாத்தறை மாவட்டத்தின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் மாத்தறைமற்றும்கம்புருப்பிட்டிய பிரதேசங்களின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளமையால் குறித்த பகுதியினூடாக செல்லும்வாகனசாரதிகள்மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துரலிய, மாலிம்பட, கம்புருபிட்டிய மற்றும் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவுகள் கடும் மழையால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நாள் முழுவதும் நில்வலா ஆற்றை அண்மித்த தாழ்வான பகுதிகள் பாதிக்கப்படும் என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெல்லவாயவில் செவ்வாய்க்கிழமை இரவு அதிகரித்துக் காணப்பட்ட கிரிந்தி ஓயாவின் நீர்மட்டம் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது. (05)

# கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்





சிறுநீரக நோயாளர்களின் இரத்தத்தை சுத்திகரிக்க உதவும் இரத்த சுத்திகரிக்கும் இயந்திரம் கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் வைத்து வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்கபிலநுவன் அத்துகோரள தலைமையில் குறித்த இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

கந்தளாய், தம்பலகாமம், சேருவில போன்றபிரதேசசெயலகப்பிரிவுகளில் வசிக்கும்பெருந்தொகையானமக்கள் தமது பிரதான வைத்தியசாலையாக கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருகின்றனர்.

இவர்களில் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள் கந்தளாய் வைத்தியசாலையில் இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் இல்லாத காரணத்தால் பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை போன்றதூரவைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களுக்கு தெரியப்படுத்தியதுடன், ஐ.ஓ.சி எரிபொருள் கம்பனியின் வேண்டுகோளுக்கு இணங்க, கந்தளாய் தள வைத்தியசாலைக்கு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் புதிய இரத்த வடிகட்டும் இயந்திரம் வழங்கப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெ.ஜெ.முரளிதரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

# சீனாவின் சி யான் 6 ஆராய்ச்சி கப்பல் நேற்றுக் கொழும்பை வந்தடைந்தது!



புவிசார்அரசியல்சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளசீனாவின்சியான் ஆறு ஆராய்;ச்சிக்கப்பல் நேற்று (புதன்கிழமை)கொழும்புதுறைமு-கத்தை வந்தடைந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனை உறுதி செய்து ள்ளார். இந்தியாவிற்கு கரிசனையை ஏற்படுத்தியுள்ள கப்பல் நேற்று கொழும்புமு-றைமுகத்தை வந்தடைந்தது.

முன்னதாகஇந்தகப்பல்நவம்பர்மாதம்இலங்கைவருவதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

எனினும் சீனா ஒக்ரோபரில் இந்த கப்பல் இலங்கை வருவதற்கான அனுமதியை கோரியிருந்தது. கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் சீனாவின் ஆராய்ச்சி கப்பலின் இலங்கை விஜயம் குறித்து கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்த இந்தியா, இந்தக் கப்பலின் இலங்கை விஜயம் குறித்து கடும் கரிசனை வெளியிட்டுள்ளதுஎனஇராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்துசமுத்திரத்தின் கடலில் ஆராய்ச்சிகளில் ஈடுபடும் திறன் சீன கப்பலிற்கு உள்ளதை சுட்டிக்காட்டி இந்தியா, பலதடவை கரிசனை வெளியிட்டுள்ளது.

இந்தஆராய்ச்சிகள்சீனாவின் நீர்மூழ்கிகள் இந்து சமுத்திரத்தில் செயற்படுவதற்கு மிகவும் அவசியம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். 05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.10.2023இல் வெளியிடப்பெற்றது.